EASTERN UNIVERSITY, SRI LANKA
10 JUN 2013

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2010/2011
(ஜனவரி/பெப்ரவரி 2013)

# OCC 3102 சூழல் முகாமைத்துவம் (Environmental Management)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01.(அ) சூழல் தொகுதியினை பாகுபாடு செய்து உயிரின, உயிரற்ற கூறுகளுக்கிடையே காணப்படும் சிக்கலான இடைத்தொடர்பினை எடுத்துக் காட்டுக.

(15 புள்ளிகள்)

(ஆ) மேலே குறிப்பிட்ட ஏதாவது ஒரு சூழல் தொகுதியில் இடம்பெறும் உணவுச் சங்கிலித் தொடர்பு (Food Chain) பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

02.(அ) சூழல் சார் அனர்த்த நிகழ்வுகளை பாகுபாடு செய்க.

(07 புள்ளிகள்)

(ஆ) அவற்றில் ஏதாவதொரு அனர்த்த நிகழ்வினைத் தேர்ந்தெடுத்து அதன் உருவாக்கத்திற்கான நிலமைகள், விருத்தி, அந்நிகழ்வுகளினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக இந்திய, இலங்கை அனர்த்த அனுபவங்களினடிப்படையில் விளக்குக.

(18 புள்ளிகள்)

03. "பசுமைப் புரட்சியின் பின்னர் விவசாயத்தில் நவீனமயமாக்கம் பரந்தளவில் இடம்பெற்று வருவதனால் பல்வேறு சூழலியல் பிரச்சினைகளுக்கு நாடுகள் முகம்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது". இக்கூற்றினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

(25 புள்ளிகள்)

04.(அ) புவிக்கோளம் வெப்பமடைதலுடன் தொடர்புபட்ட சூழலியல் பிரச்சினைகள் எவையெனக் குறிப்பிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) "கிராமப்புறங்களைவிட நகரப்புறங்களில் வளிவெப்பநிலை உயர்வடைவதனாலும், வளிமாசுக்கள் அதிகரிப்பதனாலும் நகர சூழலில் அசௌகரியங்கள் அதிகரித்து வருகின்றன". இக்கூற்றினை உதாரணங்கள் கொண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

05. "நிலைத்து நிற்கும் அபிவிருத்தி தொடர்பாக சூழலியலாளர்கள், பொருளியலாளர்கள், காலநிலையாளர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் எதிர்காலத்தில் சூழலின் நிலைபேற்றை வலுவூட்டவல்லதாகும்"– ஆராய்க.

(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை எழுதுக.

(அ) அருகிவரும் அயன மழைக்காடுகளும் அதன்மூலமான சூழல் பாதிப்புக்களும்.

(ஆ) இலங்கையில் முருகைக்கல் அகழ்வும் அதனால் ஏற்பட்டுவரும் சூழல் சீர்குலைவும்.

(இ) சகாராப் பகுதியில் பாலைவனமாதல் செயன்முறை

(இ) சூழல் தாக்க மதிப்பீடு (Environmental Impact Assessment – EIA)

(12.5x2=25 புள்ளிகள்)

***